**Summary of the Public Hearing proceeding for the project of M/s.IL & FS TamilNadu Power Company Limited for its proposed 3600 MW Thermal Power Plant held on 05.02.2010 at Project Site.**

Present :-

Thiru.P. Seetharaman, I.A.S, :District Collector, Cuddalore.

Thiru.D. Sekar, M.Tech., :District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Cuddalore.

Participants of Project Proponent.

1. Thiru.M.S. Srinivasan, I.A.S.(R):Chairman, IL&FS TamilNadu Power Company Limited.
2. Tmt.Sumathy S Iyer
3. Thiru.Rajnish
4. Thiru.B. Ratheesh
5. Thiru.S.R. Murthy Yandamury
6. Thiru.Pawan Gopal

Representatives from NGOs, Public, District Administration, Local Bodies and Consultants for the project were present.

The District Environmental Engineer, Cuddalore welcomed the gathering and requested the Project Proponent to explain the project

The District Collector explained the purpose of convening the Public Hearing and requested the Public to give unbiased opinion which would be recorded.

Thiru M S Srinivasan, Chairman of IL & FS TamilNadu Power Company Limited explained the Project thro' a Power Point presentation covering the details about the company developing the project, project components & features and the details about the project. The Chairman/ITPCL also explained about the technical aspects & engineering, and environmental mitigation measures taken for controlling the Pollution, the benefits accruing to the Society/Public from this project, and the initiatives of the company pertaining to Corporate Social Responsibilities. He highlighted that environmental protection would receive as much attention as the main project itself and this would employ the state-of-the art technology available globally. It was explained further that the Mangroves at Pichavaram situated 9.5 kms away from site would not be impacted from the implementation of this project. Chairman also informed that there would be direct and indirect employment opportunities for the local population from the proposed project and the project would contribute to enhanced economic development of this area.

Subsequent to Chairman's presentation, District Collector requested the public to express their views.

**Views Expressed by the Public are as below:-**

**1) Mr. Ramalingam, Panchakuppam**

Mr. Ramalingam expressed that he and some of his villagers had sold the land to the Company at a price which is lower than the current price. He further expressed that they sold the land on the presumption that the project is implemented by Government and the price was fixed by Government. But, he understands that the land price is increased now and hence, he requested that the differential price between the current price and the price paid earlier be paid.

**2) Mr. Sowri Rajan, State Secretary for All India SC / ST Community, Kumbakonam**

He expressed his apprehension that the Land Registration has been taking place after office hours. While, welcoming this project, he however, requested that this matter be looked into.

**3. Mr. Chezhian, President, Fisherman, Killai Panchayat.**

He expressed that the pollutants and the impact of the project might harm livelihood of the fishermen. So he requested that the project location may be revisited

**4. Mr. Elango @ Sundarajan, Kran Pettai, Tamil Neethi Katchi**

He expressed that promoters of the nearby existing projects had earlier assured various benefits including employment opportunities to the locals. But no employment opportunities were given to them as assured. Moreover, the nearby project had restricted access to the villagers into their seafront/project premises. The taste of fishes has also changed due to the pollution from the existing industries. Based on his past experience with other projects which are existing in the vicinity, the developments of industries have not resulted in any benefit for the society but, it caused more pollution in the area. In the case of a refinery project being established in the District, it was informed to them that this would benefit the locals, but no such benefit from the project is seen now.

The projects which gave assurances in the District on giving employment and works contracts to local people have failed to honour their commitments. So he expressed his apprehensions that the same thing might also happen in the case of the proposed power plant project.

5) **Mr Ramalingam / Annapanpettai – Fishermen Community**

He welcomed the project and requested that employment opportunities may be provided on preferential basis to fishermen and locals according to their skill and qualifications. Subject to the above, he welcomed the project.

6) **Mr Kathavarayan, Vellingirayanpettai**

He expressed that for the past three decades they have been cultivating casuarina trees in Porambokku land and the same is being denied now. So he requested that they may be allowed to continue growing casuarina and cutting it in poromboke lands despite this project coming up.

7) **Mr.Paranthaman, Singaravelan Munnetra Peravai**

He expressed that though the project proponent had explained that the ground water would not be tapped to the extent possible, there would be drawl of ground water in case of any failure in pumping seawater. He added further that the proponent did not list any demerits of the project to the locals. He had a concern that the discharge from the power plant might affect the fishing and the proponent has not listed out the demerits of the project

Responding to this, Chairman/ITPCL said, he had clarified that for the operation of the Plant, desalinated seawater will be used and ground water will not be tapped.

8) **Mr.R.Subhash, Singaravelan Munnetra Peravai**

He expressed that this project might affect the fishermen community and hence should not be encouraged. He was of the view that the brine discharge would increase the salt content and hence affect the life of fishes. For this, R.Srinivasan, Retd Joint Director, Department of Fisheries replied that even if there is discharge of brine, the increase in salinity would be within the acceptable norms prescribed by the Board and hence the fishes would not get affected.

9) **Mr.Vijaykumar, Sanankuppam**

He requested the district Collector to check the land value and requested written confirmation / documentation for providing employment opportunities to the nearby villagers.

10) **Mr.Nizamuddin, NGO,**

He said that though this project is for 3,600 MW, the project company has intention to implement 10,000 MW capacity in the region in the future as per the information available in the website. He said that Cuddalore is ranked 16th in the list of highly polluted places in India. Since about 20,000 MW capacities are planned including those of other companies in Cuddalore area, he said that the authorities should consider studying the collective

environmental impact due to these projects instead of studying the environmental impact on individual basis. In his understanding, the Government has cancelled the permission for the proposed coastal power projects (Merchant Power Plants)in GO dated 24-11-2009. Hence, he expressed as to how the project could be considered for clearance.

The District collector requested the Proponent to reply to the above observation. Chairman /ITPCL informed that the Govt has not cancelled the permission, but had only withdrawn the facilitation letter issued in 2007 subsequent to certain observation of the Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC). Further he explained that the Experts Advisory sub- committee had visited the site in 2008 and cleared it for taking up of EIA studies.

**11) Mr.Veeraperumal, Villianallur**

He expressed the following views;

The land was purchased by persuasion and the land registration happened after office hours. From the past experience, it is noticed that the locals are offered unskilled labour works. He requested the District Collector to indicate the current rates fixed by the Government for the land.

In response to this, District Collector observed that the land purchase did not fall under compulsory acquisition by Government and hence the question of fixing price/rates by the Government did not arise.

**12) Ms.Chandrakala, Samiyarpettai**

She said that the land owners had sold the land of their own and satisfied with the price. At that time neither NGOs nor any other agencies did raise any objection. She expressed that now also the land owners want only more money and not the land back. She welcomed the project and requested the project company to give preference in employment to local people according to their skills.

**13) Mr.S.Ramanathan, SIPCOT - Semankuppam**

He expressed that the pollution level at Cuddalore industrial area is already high and hence the authorities should consider carrying out a combined EIA / carrying capacity for this region. He wanted to know how many people would get employment under different categories through this project.

At the end of this, the District Environmental Engineer delivered vote of thanks to the gathering.

Summing up the Public Hearing Proceedings, the District Collector stated that all the issues raised by the Public have been recorded and will be submitted to the MOEF, Government of India for taking further necessary action.

Sd/-xxxxx
District Collector,
Cuddalore District.

- / True copy / -

District Environmental Engineer, TNPC Board, Cuddalore.

**<u>ஜைல் & எப்ஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட் புதிய தொழிற் திட்டம் தொடர்பாக 05.02.2010 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.</u>**

| | | |
|---|---|---|
| **தொழிற் திட்டத்தின் பெயர்** | : | ஜைல் & எப்ஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட், |
| | | 1. 3600 மெ.வா. அனல் மின் நிலையம். |
| | : | 2. சுயதேவைக்கான துறைமுகம் – 15 MTPA |
| | | 3. கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் 30 MLD. |
| **தொழிற்திட்ட அமைவிடம்** | : | கொத்தட்டை, அரியகோஷ்டி, வில்லியநல்லூர் மற்றும் சிலம்பிமங்களம் ஆகிய வருவாய் கிராமங்கள், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம். |
| **தேதி மற்றும் நேரம்** | : | 05.02.2010 – முற்பகல் 10.30 |

**முன்னிலை :-**

| | | |
|---|---|---|
| திரு.பெ. சீத்தாராமன், இ.ஆ.ப., | : | மாவட்ட ஆட்சியர், கடலூர் மாவட்டம். |
| திரு.து. சேகர், எம்.டெக் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர். | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், |

**திட்ட அலுவலர்கள் :-**

1. திரு.எம்.எஸ்.சீனிவாசன், :தலைவர், இ.ஆ.ப. (ஓய்வு) ஜைல் & எப்ஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட்.
2. திருமதி.சுமதி எஸ் அய்யர் : உதவி துணைத்தலைவர், ஜைல் & எப்ஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட்,
3. திரு.ரஜனீஸ்
4. திரு.பி.ரத்தீஸ்
5. திரு.எஸ்.ஆர். மூர்த்தி யாண்டமுரி
6. திரு.பவன் கோபால்.

பொது மக்கள் 281 நபர்கள்.

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் வரவேற்று திட்டப் பொறுப்பாளர்களை திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் காரணத்தை விளக்கி பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டதோடு பொதுமக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்படுவதையும் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து திரு.எம்.எஸ்.சீனிவாசன், தலைவர், ஜைல் & எப்ஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட் அவர்கள் தனது திட்ட விளக்க உரையில் இந்தியாவில் கட்டமைப்பிற்கான நிதியளிப்பு மற்றும் திட்ட மேம்பாட்டு பணியில் இயங்கிவரும் மிகப் பெரிய நிறுவனமான ஜைல் & எப்ஸ் குழுமத்தின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட் 3600 மெகா வாட் அனல் மின் நிலையம், 15 மெட்ரிக் டன் / வருடத்திற்கு நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு, சுயதேவைக்கான துறைமுகம் மற்றும் தண்ணீர் சுய தேவையை பூர்த்தி செய்வதற்காக நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் திறனுள்ள கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஆகியவைகளை அமைக்க உத்தேசித்துள்ளதாக தெரிவித்ததோடு திட்டத்தின் அலகுகள், செயலாக்கம் மற்றும் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்தும் விளக்கமாக தெரிவித்தார்கள்.

இந்நிறுவனம் ஆண்டொன்றிற்கு 15 மில்லியன் டன் நிலக்கரியை இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்து, அதன் மூலம் 3600 மெகா வாட் மின் உற்பத்தி

செய்ய உத்தேசித்துள்ளது. இந்த நிலக்கரியை கையாளுவதற்கு புதிய துறைமுகம் ஒன்றை நிறுவவும், தொழிற்சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் வீட்டு உபயோகத்திற்காக மணிக்கு சுமார் 34,000 க.மீ நீரை கடல்நீரிலிருந்து நன்னீராக்கும் திட்டத்தையும் செய்ய உத்தேசித்துள்ளது. இதற்காக 1181 ஏக்கர் நிலம் உபயோகப்படுத்தப்படவுள்ளது என்றும் விளக்கினார். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

<u>பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள்.</u>

**1. திரு.ராமலிங்கம், பஞ்சாகுப்பம்.**

இந்த திட்டம் அரசால் செயல்படுத்தப்படவுள்ளது என்ற அனுமானத்திலும், நிலங்களுக்கான விலையை அரசு நிர்ணயிக்கும் என நினைத்தும், கிராமமக்களும், தாமும் நிலங்களை தற்போதுள்ள விலையைக் காட்டிலும் குறைவான விலைக்கு விற்றுள்ளோம். ஆனால் தற்பொழுது நிலங்களின் மதிப்பு அதிகரித்துள்ளதால் தாங்கள் விற்ற விலைக்கும் தற்பொதுள்ள விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையினை வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**2. சௌரிராஜன், கும்பகோணம்.**

திட்டத்தினை வரவேற்பதாகவும், அதே நேரத்தில் திட்டங்களுக்கு தேவையான நிலங்கள் அலுவலக நேரத்திற்கு பிறகு பத்திரப்பதிவு செய்யப்படுவதாகவும் இதனை தாம் கவனத்துக்கு கொண்டுவர விரும்புவதாகவும் தெரிவித்தார்கள்.

**3. செழியன், தலைவர், கிள்ளை மீனவ பஞ்சாயத்து.**

இந்த திட்டத்தின் மூலம் ஏற்படும் தாக்கத்தால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கும், எனவே திட்டம் அமையவுள்ள இடம் மறு ஆய்வு செய்யலாம் எனக் கூறினார்.

**4. திரு.இளங்கோ @ சுந்தரராஜன், தமிழர் நீதிக்கட்சி, காரணப்பேட்டை.**

முந்தைய திட்டங்களுக்கான தொழில் முனைவோர்கள் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளை உள்ளூர் மக்களுக்கு கொடுப்பதாக உறுதி அளித்திருந்தனர். ஆனால் அவ்வாறு உறுதி அளித்தது போல் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. தற்பொழுது இயங்கிரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளினால் மீன்களின் சுவை மாறியுள்ளது. கடந்த கால அனுபவங்களிலிருந்து பார்க்கும் பொழுது சுற்று வட்டாரப் பகுதிகளில் இயங்கிவரும் தொழிற்சாலைகளினால் மக்களுக்கு எந்தவொரு பயனும் கிடைப்பதில்லை. ஆனால் அந்தப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. நாகார்ஜுனா ஆயில் ரிபைனரி தொழிற்சாலை துவக்கும் பொழுதும் உள்ளூர் மக்கள் பயனடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த திட்டத்தின் மூலம் எந்த பயனும் கிடைக்கவில்லை. வேலைவாய்ப்பு மற்றும் ஒப்பந்த பணிகள் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்படும் என தெரிவித்த நிறுவனங்கள் தங்களது உறுதியை காப்பாற்ற தவறிவிட்டன. இதே போன்றதொரு நிலைமை தற்போது துவங்க உத்தேசித்துள்ள அனல் மின் நிலைய திட்டத்திலும் நடக்கலாம் என அஞ்சுவதாகவும் தெரிவித்தார்.

**5. திரு.ராமலிங்கம், அன்னப்பன்பேட்டை, மீனவ சமுதாயம்.**

தொழிற் திட்டத்தை வரவேற்பதாகவும், மீனவ சமுதாய மக்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் அவர்களது திறமை மற்றும் கல்வித் தகுதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இந்த திட்டத்தினை வரவேற்பதாக தெரிவித்தார்.

**6. திரு.காத்தவராயன், வெள்ளிங்கிரியபேட்டை.**

கடந்த 30 ஆண்டுகளாக 'புறம்போக்கு' நிலங்களில் தற்போது திட்டம் செயலாக்கப்பட உள்ள கடற்கரையோரம் சவுக்க மரங்கள் பயிரிடப்பட்டு வந்ததாகவும் அது தற்போது மறுக்கப்படுவதாகவும் தெரிவித்ததுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டாலும் சவுக்கு மரங்கள் பயிரிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்

**7. திரு.பரந்தாமன், சிங்காரவேலர் முன்னேற்றப் பேரவை.**

இந்த திட்டத்தை செயல்படுத்தக்கூடியவர்கள், இத்திட்டத்திற்காக நிலத்தடி நீர் எடுக்கமாட்டோம் என தெரிவித்தாலும் நிலத்தடி நீரை எடுப்பதற்குரிய சாத்திய கூறுகள் உள்ளன. கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்காக எடுக்கும் பொழுது ஏதேனும் தோல்வி அடைந்தால் நிலத்தடி நீரை பயன்படுத்தக்கூடும் என கருதுகிறேன். திட்ட முனைப்பாளர்கள் இந்த திட்டத்தில் உள்ள குறைபாடுகள் குறித்து உள்ளூர் மக்களுக்கு தெரிவிக்கவில்லை. அனல் மில் நிலைய திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவுகளால் மீன்பிடி தொழில் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.எம்.எஸ்.சீனிவாசன், தலைவர், ஐஎல் & எப்எஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட்.**

அனல் மின் நிலையம் செயல்படுத்தப்படுவதற்கு கடல் நீரை நன்னீராக்கி அதன் மூலம் பெறப்படும் நீர்தான் பயன்படுத்தப்படும் எனவும், நிலத்தடி நீர் பயன்படுத்தப்பட மாட்டாது எனவும் பதிலளித்தார்.

**8. திரு.ஆர்.சுபாஷ், சிங்காரவேலர் முன்னேற்றப் பேரவை.**

இந்த திட்டம் மூலம் மீனவ சமுதாய மக்கள் பாதிப்படையக் கூடும் எனவே இந்த திட்டம் இங்கு அமைய இருப்பதை ஊக்குவிக்கக் கூடாது. மேலும், வெளியேற்றப்படும் கழிவுகள் உப்புத்தன்மையை அதிகரிக்கும் எனவும், இதனால் மீன்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் கருதுவதாக தெரிவித்தார்.

**திரு.ஆர். சீனிவாசன், இணைஇயக்குனர் (ஓய்வு), மீன்வளத்துறை – கலந்தறிதற்குரியர் (Consultant).**

கழிவுகள் வெளியேற்றப்பட்டாலும், அதன் மூலம் அதிகரிக்கும் உப்புத் தன்மையின் அளவு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுக்கு உட்பட்டுதான் இருக்கும், இதனால் மீன்கள் பாதிக்கப்படாது என தெரிவித்தார்.

**9. திரு.விஜயகுமார், சோனான்குப்பம்.**

மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிலத்தின் மதிப்பை சரிபார்க்கும்படியும், அருகிலுள்ள கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து எழுத்து பூர்வமான உத்தரவாதத்தை அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

**10. திரு.நிஜாமுதீன்.**

இந்த நிறுவனம் 3600 மெ.வா. திறன் கொண்ட மின் திட்டத்தை நிறுவ இருப்பதாக தெரிவித்தாலும், எதிர்காலத்தில் 10000 மெ.வா. திறன் வரை செயல்படுத்த திட்டமிருப்பதாக வலை தளத்திலிருந்து தெரியவருகிறது. இந்தியாவிலேயே அதிக அளவு சுற்றுச்சூழல் பாதிப்பால் கடலூர் 16 வது இடத்தில் உள்ளது. மேலும் 20000 மெகா வாட் திறன் கொண்ட மின் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் கடலூர் பகுதியில் செயல்படுத்த திட்டமிட்டு இருப்பதால், பல்வேறு நிறுவனங்கள் தனியாக இல்லாமல் கூட்டாக இணைந்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டினை ஆய்வு செய்ய வேண்டும் என தெரிவித்தார். 24.11.2009 அரசாணையின்படி கடலோர மின் திட்டங்களுக்கு அனுமதியை ரத்து செய்துள்ள நிலையில் இந்த திட்டத்திற்கு மட்டும் எப்படி அனுமதி வழங்க முடியும் என தெரிவித்தார். நெய்வேலி பகுதியில் ஏராளமான சுரங்கப்பகுதி காலியாக உள்ளது. ஆந்த பகுதியில் இத்திட்டத்தினை கொண்டு செல்லலாம் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள், இதற்கு உரிய பதில் அளிக்குமாறு திட்ட பொறுப்பாளர்களை கேட்டுக்கொண்டார்கள்.

**திரு.எம்.எஸ்.சீனிவாசன், தலைவர், ஐஎல் & எப்எஸ் தமிழ்நாடு பவர் கம்பெனி லிமிடெட்.**

24.11.2009 நாளிட்ட அரசாணையில் மின்திட்டங்களுக்கான அனுமதியை ரத்து செய்யவில்லை எனவும், தமிழ்நாடு மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையம் மேற்கொண்ட observation– னைத் தொடர்ந்து 2007–ல் வழங்கப்பட்ட facilitation கடிதம் விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். (Experts Advisory Sub-Committee) துணைக்குழு

ஒன்று 2008–ம் ஆண்டு திட்டம் அமையவுள்ள இடத்திற்கு வந்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டினை ஆய்வு செய்ய ஒப்புதல் அளித்ததாகவும் தெரிவித்தார்.

**11. திரு.வீரபெருமாள், வில்லியநல்லூர்.**

ஏற்கத்தக்க காரணங்களை கூறி நிலங்கள் வாங்கப்பட்டு அலுவலக நேரத்திற்கு பிறகு பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. குடந்த கால அனுபவங்களிலிருந்து பார்க்கும் பொழுது பயிற்சி திறமையற்ற (un-skilled) வர்களுக்குதான் வேலை வழங்க முன்வருகின்றன. நில ஆர்ஜிதம் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் பேரில் செய்ய வேண்டும் என்றார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள், இந்த திட்டத்தைப் பொறுத்தவரை நிலம் எடுப்பது என்பது கட்டாய நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் வரவில்லை. எனவே, நிலங்களுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்யும் என்ற கேள்விக்கே இடமில்லை என பதிலளித்தார்.

**12. திருமதி.சந்திரகலா, சாமியார்பேட்டை.**

நில உரிமையாளர்கள் கட்டாயத்தின் பேரில் அல்லாமல் தாமாக முன்வந்து தங்கள் நிலங்களை விற்றுள்ளனர். நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் திருப்தி அடைந்துள்ளனர். அத்தகைய தருணத்தில் தன்னார்வ அமைப்பினர்களோ அல்லது இதர அமைப்புகளோ எந்தவிதமான ஆட்சேபனைகளையும் தெரிவிக்கவில்லை. தற்பொழுது கூட விற்கப்பட்ட நிலங்களுக்குரியவர்கள் கூடுதல் விலை வேண்டும் என்றுதான் கேட்கிறார்களே தவிர நிலங்களை திரும்பத் தரவேண்டும் என்று கேட்கவில்லை. மேலும், நாம் திட்டத்தை வரவேற்பதாகவும் அதே நேரத்தில் வேலைவாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு அவரவர்களது செயல்திறனுக்கேற்ப முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் தெரிவத்தார்.

**13. திரு.ராமநாதன், சிப்காட் – செம்மங்குப்பம்.**

கடலூர் தொழிற் வளாகத்தில் காற்றில் மாசு அளவு ஏற்கனவே அதிக அளவில் இருப்பதால் திட்ட பொறுப்பாளர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டினை கூட்டாக நடத்துவது குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும், இந்த பகுதியில் தொழிற் திட்டங்கள் தன்னுள் கொள்ளக்கூடிய அளவு (carrying capacity) குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும், இந்த தொழிற் திட்டத்தின் மூலம் எவ்வளவு நபர்கள் எந்தெந்த வகைகளில் வேலை வாய்ப்பு பெறுவர் என்பதை தெரிய விரும்புவதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இறுதியாக பேசும் பொழுது, பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டதாகவும், அவ்வாறு பதிவு செய்யப்பட்டவைகள் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நன்றி தெரிவித்தலை அடுத்து பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் முடிவுற்றது.

ஒப்பம் /-XXXX
மாவட்ட ஆட்சியர்,
கடலூர் மாவட்டம்.

– / உண்மை நகல் / –

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கடலூர்.